RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22217

OPEN ACCESS

# வேட்டுவக் கவுண்டர் இனமக்களின் கருட வழிபாடும் இறப்புச் சடங்குகளும்

**க. சுந்தராம்பாள்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Worships of Garuda and Death Rituals in Tribles of Vettuva Gounda's

**K. Sundharambal** [a, *]

[a] Department of Tamil, Periyar University, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: sundhara.k16@gmail.com

Received: 28-08-2021
Revised: 09-03-2022
Accepted: 14-03-2022
Published: 26-04-2022

Check for updates

**ABSTRACT**

Rituals are linked to the stages of development that lead to the transformation of human beings. Transitions from birth to death are subject to ritual performance. The benefits of the ritual also determine the cause of the ritual. Animals and birds are worshiped because of the benefits of tribal worship. Garuda worship takes place in the Vettuva Goundar community. They worship the eagle, believing that it will rain on them. It is believed that the eagle completely performed the death rites for humans and thereby obtained rain. he ancestors did so and did it by the way because it got rain. The four who performed the death rites were Dasar, Navidar, Paraiyar and Vannar. The owner of the land where the eagle lay dead accepts the cost of the ritual. Or they collect taxes from everyone and perform rituals. They follow instructions such as not performing a funeral in the twin month.

**Keywords:** Rituals, Garuda worship, Vettuva Koundar, Padai Kattuthal

## முன்னுரை

தொடக்க கால மனிதன் அதாவது ஏடறிந்த வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதனின் செயல்பாடுகள் இயற்கையின் மீதான புரிதலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இயற்கையின் நிகழ்வுகள் தொடர்ந்து ஒரே விதத்தில் நிகழும் போது அதனை அடிப்படையாகக்கொண்டு சில செயல்பாடுகளை உருவாக்கிக் கொண்டான். மழைக்காலம் ஆண்டு தோறும் வரும் போது வேளாண்மை செய்வதை வழக்கமாக்கிக் கொண்டான். இவ்வழக்கங்கள் காலப் போக்கில் திரும்பத் திரும்ப செய்யும் வகையில் தவிர்க்க முடியாத செயலாகி அதற்கு புனிதம் ஏற்றப்பட்டு சடங்குகளாகக் கடைபிடிக்கப்பட்டன (Shanthi, 2019). சடங்கு என்பது ஒவ்வொரு நிலைமாற்றத்தின் போதும் அதனை புனிதப்படுத்தும் ஒன்றாகும். பருவமெய்தியதும் திருமணம் என்பது மனிதனின் ஒரு நிலைமாற்றமாகும். இதனை சடங்காக உருமாற்றுவதன் மூலம் வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாக மாற்றப் பெறுகிறது. இதுபோல வாழ்வில் தவிர்க்கக் கூடாத, முடியாத செயல்கள் புனிதப்படுத்தப்பட்டு சடங்குகளாக உருமாற்றம் பெறுகின்றன (Senthamarai, 2021). வேளாண்மை நிறைவடையும்போது திருவிழாக்கள் தவிர்க்க முடியாதவை. அது போல மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையிலான நிலைமாற்றங்கள் அனைத்தும் சடங்குகளாக நிகழ்த்தப்படுகின்றன. சில சமூகங்களில் வழிபாட்டிற்குரிய விலங்குகள், பறவைகள் அவர்களது குலக்குறிகளாக கருதப்படுகின்றன. அவற்றை வழிபடுதல் தவிர்க்க முடியாத செயலாகி அதைக் கடைபிடித்து வருவர். அவ்வாறான ஒரு வழிபாடு வேட்டுவக் கவுண்டர்களின் வாழ்வில் காணப்படுகிறது. அவர்கள் கழுகினை வழிபட்டு வருகின்றனர். அவர்களது

வழக்கப்படி கழுகு இறக்கும் போது அதற்கான இறப்புச் சடங்குகளை செய்து அடக்கம் செய்கின்றனர். அவர்களது இவ்வழக்கத்தை அறிந்து கொள்ள இக்கட்டுரை முயல்கிறது.

## சடங்குகள்

சடங்குகள் ஒவ்வொரு சமூகத்திலும் வெவ்வேறு நோக்கங்களுக்காககச் செய்யப்படும் செயல் சார்ந்த ஒன்றாகும். குறிப்பிட்ட காலத்தில், சூழலில் நிகழ்த்தப்படும் சடங்குகள் அச்சமூகத்தின் தொன்மங்களோடு தொடர்புடையவையாக அமைந்துள்ளன. “ஒவ்வொரு சமூகத்தின் மூல வடிவமாக விளங்குவது அச்சமூகத்தினர் கொண்டுள்ள தொன்மங்களாகும். இத்தொன்மங்களும் அவை பற்றிய சிந்தனைகளும் சடங்கின் செயல் வடிவத்திற்கு மூலாதாரமாகத் திகழ்கின்றன. அம்மன் கோயில்களின் திருவிழாக்களில் செய்யப்படும் உயிர்ப்பலிச் சடங்காயினும் சரி திருஷ்டி கழிக்கும் போது செய்யும் தாவரப் பலி (குங்குமம் தடவிய எலுமிச்சையைப் பிழிதல், குங்குமத்தை உள்ளே போட்டுப் பூசணியை உடைத்தல்) ஆயினும் சரி இன்னும் பிற நிகழ்வுகளில் செய்யும் வெவ்வேறு வகையான சடங்குகளிலும் அச்சமூகத்தின் தொல்படிவ (ஆர்க்கிடைபல்) சிந்தனைகளும் அவை சார்ந்த வெளிப்பாடுகளுமே செயல்வடிவமாக வெளிப்படும்” என்ற கூற்று ஒரு சமூகத்தில் நிகழ்த்தப்படும் சடங்கின் மூலப் படிவ சிந்தனையைப் பற்றிக் குறிப்பிடுகிறது (Bakthavatsala Bharathi, 2005).

வேட்டுவக் கவுண்டர்களின் கழுகுக்கு நிகழ்த்தப்படும் இறப்புச் சடங்கானது, அப்பறவையினை தம் குடும்ப உறுப்பினராகக் கருதும் போக்கினை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு இயற்கையை, விலங்குகளை, பறவைகளைத் தம் உறவாகக் கருதுவது அவர்களது மூலப் படிவ சிந்தனையில் அவை தமக்கு ஆற்றலைத் தரும் என்னும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுவதாகும். “தாங்கள் வேட்டையாடிய அல்லது வளர்த்த விலங்குகளின் தோல்களை ஆடையாகப் பயன்படுத்துவதாலோ, பல், நகம் போன்ற உறுப்புகளை அணிகளாக அணிவதாலோ அல்லது அவ்விலங்குகளின் இறைச்சியை உண்பதாலோ அவற்றின் ஆற்றலைப் பெறலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. இந்நம்பிக்கையின் விளைவாகச் செய்யப்பட்ட சடங்குகளைத் தொத்து மந்திரச் சடங்குகள் எனலாம்” என்னும் கூற்று விலங்குகளைப் பறவைகளைத் தம்மோடு உறவுபடுத்திக் கொள்வதற்காகச் செய்யப்படும் சடங்குகளைத் தொத்துச் சடங்குகள் என்று கூறுவதைக் காணலாம் (Bakthavatsala Bharathi, 2011). வேட்டுவக் கவுண்டர்களின் கழுகு வழிபாடும் இத்தகைய தொத்து மந்திரச் சடங்காகக் கொள்ளலாம். கழுகு திருமாலின் வாகனமாகக் கருதப்படுவதால் அவர்கள் வணங்கும் தெய்வத்தின் பொருட்டு அதற்குச் சடங்குகள் செய்து அதன் இறப்பினை உரிய முறையில் அடக்கம் செய்ய முற்படுகின்றனர் எனலாம்.

இறப்புச் சடங்குகள் மனிதர்களின் இறப்பின் போது நிகழ்த்தப்படுவதாகும். இது வாழ்க்கைவட்டச் சடங்குகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. பிறப்பு, முதுமை, இறப்பு என்பன இயற்கையானவை. அவை நிகழ்ந்தே தீரும் என்பதால் அவற்றை சடங்குவழி புனிதப்படுத்தும் தன்மை மனிதர்களிடம் ஏற்பட்டிருக்கிறது. ஆன்மாவின் ஈடேற்றத்திற்கும் இறப்புச் சடங்குகள் இன்றியமையாதது என்ற கருத்தும் காணப்படுகிறது. “முன்னோர்கள் இறப்பு, வளமை இரண்டோடும் தொடர்புடையவர்கள். அதனால்தான் முன்னோர் வழிபாட்டை மங்களமானது என்றும் அமங்களமானது என்றும் கூறுவர். இறந்தாலும் தன் சந்ததியினரோடு தொடர்பு கொள்கிறார். ஈமச் சடங்கின் இறுதிகட்டமான கருமாதி ஆற்றங்கரையில் குளக்கரையில் செய்யப்படகிறது” என்று இறப்பு மனிதர்களின் வாழ்வில் நிலை கொண்டிருக்கும் விதம் பற்றி எடுத்துரைக்கிறார் (Bakthavatsala Bharathi, 2005). வேட்டுவக் கவுண்டர்கள் கருடனை அல்லது கழுகினைத் தம் முன்னோராகக் கருதியே இறப்புச் சடங்குகளை நிகழ்த்துகின்றனர். ஒருவகையில் இது வளமைக்கானச் சடங்காகக்கொள்ளப்படுகிறது. அதனால்தான் யாருடைய நிலத்தில் இறந்து கிடந்ததோ அவரே அதன் ஈமச் சடங்குச் செலவுகளைச் செய்கிறார். இது அவருக்கு நிறைய விளைச்சலைத்தரும் என்னும் நம்பிக்கையின்பாற்பட்டதாகும். கழுகிற்கு சடங்கு செய்தால் மழை கிடைக்குமென நம்பியே இதனைச் செய்கின்றனர் எனத் தகவலாளர் சுப்பிரமணி குறிப்பிடுகிறார். மழை கிடைத்து அதன் பயனை அடைந்ததால் இவ்வழிபாடு இச்சமூகத்தினரின் வழக்கமாக மாறியிருக்கிறது என்றும் கொள்ளலாம்.

## கழுகின் இறப்புச் செய்தியைத் தெரிவித்தல்

ஒருவருக்கென்று உரிமையுடைய நிலத்திலோ அல்லது ஏதேனும் ஒரு பொது இடத்திலோ கழுகு இறந்து கிடப்பதை யார் முதலில் பார்க்கின்றாரோ அவர் தன் ஊரில் உள்ள தாசரிடம் சென்று கூறுவர். தாசர் என்பவர் கோயிலில் பூசை செய்யும் தொழிலில் ஈடுபடுபவர். தாசரிடம் செய்தியை கூறியவுடன் அவர் தன் ஊரில் உள்ள பறை ஒலிக்கும் தொழிலில் ஈடுபடும் பறையனென்பவரிடம் சென்று கழுகு இறந்துள்ள செய்தியைக் கூறுவர். அவர் பறைகளை ஒலித்தவாறு தாரை, தப்பட்டை முழங்க மேளதாளங்களுடன் ஊர் மக்களுடன் அனைவரும் இணைந்து கழுகு இறந்துள்ள இடத்திற்குச் செல்வர். புதிதாக ஒரு மண் பானையையும், மூன்று வெள்ளை நிறக் கயிறுகளையும் வாங்கிக் கொண்டு கழுகு இறந்துள்ள இடத்திலிருந்து அதனை வேறு ஒரு இடத்திற்கு எடுத்து வருவர். பின் ஏதேனும் ஒரு நிழலுள்ள மரத்தில் மண்பானையினுள் கழுகினை வைத்து பானையைச் சுற்றிலும் மூன்று புறமும் கயிற்றால் உறிகட்டி மரத்தின் நிழலில் கட்டித் தொங்கவிடுவர்.

## நாள் குறித்தல்

கழுகின் இறப்புச் செய்தி அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டு கழுகினை உரியில் கட்டித் தொங்க விடுவர். பின் கழுகிற்குச் சடங்கினை மேற்கொள்ளும் பொருட்டு நாள் குறிக்கப்படும். கழுகு இறந்துள்ள மாதம் இரண்டு மாதங்களுக்கு இடைப்பட்ட மாதமாக இருப்பின் அவ்வாறு வரும் இரட்டை மாதங்களில் சடங்குகளைச் செய்வதில்லை. இரட்டை மாதம் முடிந்து அடுத்து தொடங்கும் வேறு மாதத்தில் முதலில் வரும் சனிக்கிழமையினை சடங்கு செய்ய ஏற்ற தினமாகக் கருதி சடங்குகளை மேற்கொள்வர். சனிக்கிழமை தவிர்த்த வேறு நாட்களை இச்சடங்கை நடத்துவதற்குரிய நாளாக ஏற்றுக் கொள்வதில்லை.

## வரி வசூல் செய்தல்

கழுகு இறந்ததற்கு உரிய சடங்குகள் செய்வதற்கு பயன்படும் பொருட்களை வாங்குவதற்குத் தேவையான பணத்தை வசூல் செய்வார்கள். இச்சடங்கிற்குத் தேவைப்படும் பணத்தினை யாருடைய நிலத்தில் கழுகு இறந்து கிடந்ததோ அவரே அனைத்து செலவுகளையும் தானே ஏற்றுக்கொள்ள விரும்பினாலும் ஏற்றுக் கொள்ளலாம். ஊரில் உள்ள மக்களும் தங்களுக்கு ஏற்றவாறு பணமாகவோ அல்லது பொருளாகவோ கொடுக்க விரும்பினாலும் கொடுக்கலாம். தனிப்பட்ட ஒருவரின் நிலத்தில் அல்லாமல் வேறு ஏதேனும் ஒரு பொதுவான இடத்தில் கழுகு இறந்துபட்டிருப்பின் அதற்குரிய செலவினை மேற்கொள்ளத் தேவைப்படும் தொகையை ஊரில் உள்ளவர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டு பணம் கொடுக்க வேண்டும்.

## சடங்கில் பங்கேற்கும் முக்கிய நபர்கள்

இறந்த கழுகிற்குத் தேவைப்படும் சடங்குகளை மேற்கொள்ள நான்கு நபர்கள் முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர். இந்நால்வரும் தனித்தனி சடங்கியல் செயல்பாடுகளில் ஈடுபடுவதால் இவர்கள் இச்சடங்கில் முதன்மையானவர்களாகக் கருதப்படுகின்றனர். தாசர்: கழுகிற்கு பூசைகள் மற்றும் சடங்குகள் செய்வதில் இவருக்கு பெரும்பங்கு உண்டு. ஆடு பலியிடுதல் மற்றும் உணவு சமைத்து கவாள பூசைகள் செய்வதற்கு உரியவராக தாசர் விளங்குகிறார். நாவிதர்: சடங்கில் பலியிடப்படும் ஆட்டிற்கும், பலியிடும் பணியை மேற்கொள்ளும் தாசருக்கு சவரம் செய்யும் பணி மற்றும் பருந்திற்கு கோடி போடும் சடங்கையும் நாவிதர் மேற்கொள்வார். பறையர்: சடங்குகளின் போது தேவைப்படும் மத்தள வாத்தியங்கள் இசைக்கும் பணி இவரால் நடத்தப்படுகிறது. வண்ணார்: கழுகிற்கு மாற்று துணிகள் கொடுத்தல் மற்றும் தீப்பந்தம் பிடித்தல் சடங்கு இவருக்கு உரியதாகும்.

இவ்வாறு கழுகிற்கு மேற்கொள்ளப்படும் சடங்குகள் அனைத்திலும் இந்நால்வரின் பங்கேற்பும் முக்கியத்துவம் பெற்றாத உள்ளதால் இந்நால்வரும் இணைந்தே அனைத்து காரியங்களிலும் ஈடுபட்டு சடங்குகளை நிறைவேற்றுவர்.

## கோடி போடுதலும் திலகமிடுதலும்

இறந்தவருக்குப் போடப்படும் புதிய ஆடைக்குக் ‘கோடி’ என்று பெயர். வெள்ளை வேட்டி ஒன்றும் சிவப்பு வண்ணத் துண்டு ஒன்றும் இறந்த கழுகிற்கு கோடியாகப் போர்த்தப்படும். இக்கோடியை நாவிதர் போடுவர். கோடி போடும் சடங்கிற்குப் பின்னரே கழுகிற்குத் திலகமிடும் சடங்கு மேற்கொள்ளப்படும். திருநீற்றுக் கட்டியினை மட்டும் திலகமிடுவதற்குப் பயன்படுத்துவர். இத்திருநீற்றுக் கட்டிக்கு ‘நாமக் கட்டி’ என்று பெயர். இந்நாமக் கட்டியை நீரில் குழைத்து அதனை இறந்துள்ள கழுகின் நடு நெற்றியில் திலகமாகக் கருதி அணிவிப்பர். இதற்குத் ‘திலகமிடுதல்’ என்று பெயர். கழுகிற்குத் திலகமிட்ட பின் தாசரும் தன் நெற்றியில் திலகமிட்டுக் கொள்வார். பின் அங்குள்ள அனைவருக்கும் திலகமிடப்படும். திலகமாக நாமத்தை மட்டுமே இட்டுக் கொள்ள வேண்டும்.

## பாடை மற்றும் அம்பு வில் கட்டுதல்

இறந்தவரை எடுத்துச் செல்வதற்கு என்று பாடை கட்டும் வழக்கம் சங்க காலம் முதல் இருந்து வருவதை,

“கால்கழிக் கட்டிலிற் கிடப்பித்

தூவெள் அறுவை போர்ப்பித் திலதே” (Balasubramanian, 2007)

என்று புறநானூற்றுப் பாடல் சுட்டுகிறது. கழுகிற்குச் செய்யப்படும் இறப்புச் சடங்கிற்கு பாடையும் வில் அம்பும் முக்கியத்துவம் பெறுகிறது. பாடை கட்டுவதற்கு அரளிச் செடியின் குச்சிகள் மட்டுமே பயன்படுத்தப்படும். நான்கு அரளிச் செடியின் குச்சிகளை எடுத்து குறுக்கும், நெடுக்குமாக இரண்டு குச்சிகளை வைத்துக் கட்டுவர். கழுகினை பாடையில் வைத்து எடுத்துச் செல்வதற்கு ஏற்றவாறு பாடையின் மீது துளசிச் செடியின் குச்சிகளைப் பரப்பி வைப்பர். இவ்வாறு துளசிச் செடியின் குச்சிகளை வைப்பதனை ‘துளசிமார் வைத்தல்’ என்று அழைப்பர். துளசிமார் வைக்கப்பட்ட பின் அதன் மீது கோடி போர்த்தப்பட்ட கழுகினை வைப்பர். இவ்வாறு கழுகிற்கு மேற்கொள்ளப்படும் சடங்குகள் அனைத்து வகையான கழுகுகளுக்கும் மேற்கொள்ளப்படுவது இல்லை. பலவகைகளாக உள்ள கழுகுகளில் எந்த கழுகிற்கு அதன் நெற்றியில் வெள்ளை நிறத்தாலான நாமம் போன்ற குறியீடு உள்ளதோ அக்கழுகிற்கு மட்டுமே இவ்வகையான இறப்புச்சடங்குகள் மேற்கொள்ளப்படும்.

## சவரம் செய்தல்

இறந்த கழுகிற்கு சடங்குகள் நடத்தப்படும் தருணங்களில் ஆடு ஒன்றினைப் பலியிடப்படுவது வழக்கம். அவ்வாறு பலியிடப்படும் ஆடு செம்மறி ஆடாக மட்டுமே இருத்தல் வேண்டும். செம்மறியாட்டைத் தவிர மற்ற எந்த வகை ஆடுகளும் இப்பலியிடுதலுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. பலியிடப்படும் செம்மறி ஆட்டினை ஓரிடத்தில் கொண்டு வந்து நிறுத்துவர். இறப்புச் சடங்கில் கலந்துள்ள நாவிதர் அச்செம்மறி ஆட்டிற்கு அதன் உடலிலுள்ள தாடியையும், மீசையையும் நீக்குவர். பின் பூசை செய்யும் தாசர்கள் இருவருள் எவரேனும் ஒருவருக்கு தாடியும், மீசையும் நீக்கப்படும். இதனை ‘சவரம் செய்தல்’ என்றழைப்பர். “இறுதிச் சடங்கை நடத்தும் பொறுப்புள்ளவன் முதலில் குளிக்க வேண்டும். தாடி, மீசைகளை மழிக்க வேண்டும். மீண்டும் குளிக்க வேண்டும் என்ற சடங்கு நடைமுறையின்படியே சவரம் செய்யப்படுகிறது எனலாம் (Dubuva, 2008). இச்செம்மறி ஆட்டினை கழுகு இறந்துள்ள நிலத்தின் உரிமையாளரே தன் சொந்த செலவில் வாங்கி கொடுக்கலாம் அல்லது ஊர் மக்களிடம் பெறப்பட்ட பணத்தின் மூலமாக வாங்கிக் கொள்ள விரும்பினாலும் வாங்கிக் கொள்ளலாம். இச்சவரம் செய்யும் சடங்கு முடிந்த பின்பே மற்ற சடங்குகள் மேற்கொள்ளப்படும்.

## மூன்று கலசங்களில் நீர்

பாடையில் வைக்கப்பட்ட கழுகினை ஓரிடத்திற்கு பூசைகள் செய்வதற்கு எடுத்து வருவர். அக்கழுகு வைக்கப்பட்ட இடத்தில் மூன்று சிறிய மண் பானைகளில் நீர் நிரப்பி வைக்கப்படும். இதற்கு

'கலசம் வைத்தல்' என்று பெயர். அக்கலசத்திற்கு திருநீறு, சந்தனம், குங்குமம் மற்றும் பூ வைத்து அலங்கரிப்பர். இக்கலச நீரினையே கழுகினைச் சுடும் போதும், ஆடு பலியிடும் போதும் தேவைப்படும் நீரினை இதிலிருந்து எடுத்து பயன்படுத்துவர். இறுதியில் மூன்று கலசங்களையும் பூசையில் பங்கேற்கும் தாசர்கள் தங்களின் வீட்டுத் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்வதாக இருப்பின் அக்கலசங்களை எடுத்துச் செல்வர்.

## கவாள பூசை

கழுகினை நன்கு சுத்தம் செய்யப்பட்ட இடத்தில் எடுத்து வந்து வைப்பர். சடங்கில் பலியிடப்படும் செம்மறியாட்டினை கழுகு வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு பிடித்து வருவர். அதன் மீது திருநீற்றினை இட்டு, பூ மாலைகளைச் சூட்டி நீர் தெளிப்பர். செம்மறியாட்டின் மீது நீர்பட்டவுடன் அதன் உடலில் ஏற்படும் சிலிர்ப்பால் ஆடு தன் தலையினையும், உடலினையும் சிலிர்க்கும் படி உடலினை அசைக்கும். பின் அதனை தாசர் தன்னிடமுள்ள அரிவாளால் பலியிடுவார். பலியிடப்பட்ட செம்மறியாட்டினை சடங்கில் கலந்துள்ளவர்கள் அனைவரும் சேர்ந்து சமைப்பதற்கு ஏற்றவகையில் தயார்படுத்துவர். பின் தாசர் தானே முன்னின்று சமையல் பணிகளில் ஈடுபட்டு அனைவரும் உணவு உண்ணும்படி தேவையான அளவிற்கு சோற்றினையும், ஆட்டின் கறியையும் சமைத்து முடிப்பர். சமையல் பணிகள் அனைத்தும் முடிந்ததும் தாசர் தன் கைகளால் ஆட்டின் இறைச்சியையும், அரிசி சோற்றையும் பிசைந்து கழுகிற்குப் படையலிட்டு பூசைகள் செய்யப்பட்ட பின் சடங்கில் கலந்து கொண்டுள்ளவர்களில் யாரேனும் நான்கு பேருக்கு உணவு தானமாகக் கொடுக்கப்படும். தானம் கொடுக்கும் சமயத்தில் தாசர் அருள் வந்து ஆடி வாக்கு சொல்வதும் உண்டு. வாக்குக் கூறிக் கொண்டே கூட்டத்தில் உள்ளவர்களுக்கு தன் கைகளால் ஆட்டின் கறியையும், சோற்றையும் பிசைந்து கவாளமாக யாருக்காவது கொடுப்பர். இதற்கு 'கவாள பூசை' என்று பெயர்.

## கழுகினைச் சுடுதல்

இறந்தவருக்குச் செய்யும் அடக்கமானது ஐந்து வகைப்படும் என்று மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகிறது.

"சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்

தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிழ்ப்போர்" (Avvai Duraisamy Pillai, 2007)

என்று குறிப்பிடுகிறது. இங்கு மனிதனுக்குக் கூறப்பட்ட அடக்கம் செய்யும் முறைகளுள் ஒன்றான சுடுதல் என்னும் முறையை மட்டும் இறந்த கழுகிற்கும் பின்பற்றுகின்றனர். கோடி போர்த்தி பாடையில் வைத்து அலங்கரிக்கப்பட்ட கழுகிற்கு இறுதியாக சுடுவதற்குறிய சடங்கினை மேற்கொள்வர். இறுதியாக கழுகிற்கு பூசைகள் செய்யப்படும். வண்ணார் தீப்பந்தத்துடன் முன் செல்ல தாசர்; பாடையில் உள்ள கழுகினை எடுத்துக் கொண்டு அனைவரும் சுடுவதற்குரிய இடத்திற்குச் செல்வர். சுடுவதற்குரிய இடத்தில் கழுகினை வைத்து கலசத்தில் உள்ள நீரினை கழுகிற்குத் தெளித்த பின் அதனை வழிபட்டு பாடையுடன் வைத்து சுடுவர். நெருப்பில் கழுகு முழுவதும் எரிந்து முடிந்தவுடன் நீரினைத் தெளித்து நெருப்பினை அணைத்த பின் அனைவரும் சென்று உணவு உண்பர். ஊரில் உள்ள அனைவருக்கும் உணவு பரிமாறப்படும். பின் அவரவர் விருப்பப்பட்ட தொகையினை காணிக்கையாகக் கொடுத்துவிட்டு வீட்டிற்குச் செல்வார்கள். இத்துடன் அனைத்து சடங்குகளும் முடிவு பெறுகின்றன. இத்தகைய இறப்புச் சடங்கில் பெண்களின் பங்களிப்பு பெரும்பாலும் இருப்பதில்லை. ஆண்களே இச்சடங்கினை முன்னின்று நடத்துகின்றனர். "இறந்தவருக்கு இறுதிக்கடன் செய்யும் சடங்கு ஆண்மகனுக்கே உரியது என்றும் அல்லது இறந்தவரின் உறவினர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கருடபுராணம் குறிப்பிடுகிறது" இவ்வாறு மனிதனைப் போலவே ஆண்களே கழுகிற்குரிய இறப்புச் சடங்கினையும் ஆண்களே மேற்கொள்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

## கொடை கொடுத்தல்

கழுகு இறந்த செய்தி தெரிந்தது முதல் அதனை சுட்டுவிடும் வரை அனைத்து சடங்குகளையும் மேற்கொள்பவர்கள் மேற்கூறிய நால்வர் ஆவர். அவர்கள் தங்கள் பணியைச் செய்து முடித்தவுடன் அவரவருக்கு உரிய காணிக்கை வழங்கப்படும். அவர்களின் பணிக்கு கொடுக்கப்படும் பணத்திற்கு காணிக்கை என்று பெயர். ஊர் மக்களிடம் வசூலிக்கப்படும் தொகையினை இறப்புச் சடங்கிற்கு செலவிட்டது போக மீதமுள்ள தொகையினை சடங்கினை முன்னின்று நடத்திய நால்வருக்கும் பங்கிட்டுக் கொடுப்பர்.

## முடிவுரை

மனிதர்கள் தம் வாழ்வில் நிலைமாற்றங்கள் ஒவ்வொன்றினையும் சடங்கோடும் தொன்மத்தோடும் தொடர்புடுத்திக்கொள்கின்றனர். வழிபாடும் சடங்கும் இணைந்தே மக்களிடம் காணப்படுகிறது. வாழ்க்கை வட்டச் சடங்குகளில் ஒன்றாக இறப்புச் சடங்கு ஓர் நிலைமாற்றத்தினைக் குறித்து நிற்கிறது. சடங்குகளை தம் குலக்குறி சார்ந்த விலங்குகள், பறவைகளுக்கும் செய்கின்றனர். தொத்து மந்திரச் சடங்குகள் என இவை அழைக்கப்படுகின்றன. கழுகிற்குச் செய்யும் இச்சிடங்கின் மூலம் மக்கள் மழை கிடைக்கப்பெற்றதை தங்களின் கண்முன்னே கண்டு பயனடைந்துள்ளனர். இதனடிப்படையிலேயே மக்கள் இச்சடங்கிற்குரிய செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். தாசர், நாவிதர், வண்ணார், பறையர் போன்ற சாதிப்பிரிவுடைய மக்களும் இச்சடங்கில் பங்குகொள்வதன் மூலம் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ இச்சடங்குகள் வழிவகுக்கின்றன. மேலும் பாடையில் வைக்கப்படும் துளசிச்செடி நாமக் கட்டி, சிவப்பு வண்ணத்துண்டு மற்றும் வெள்ளைநிற வேட்டி போன்றவை திருமாலுக்குரியதாக இருப்பதாலும், திருமாலின் வானகமாக கழுகு உள்ளதாலும் இக்கழுகிற்கு சிறப்பிடம் கொடுக்கப்பட்டு வழிபடுவதைக் காணமுடிகிறது. மேலும் இப்பகுதி மக்கள் திருமால் வழிபாட்டில் ஈடுபாடுள்ளவர்களாக விளங்குவதும் கழுகு சார்ந்த சடங்கினை மேற்கொள்வதற்குச் சான்றாக உள்ளது.

## References


Avvai Duraisamy Pillai, (2007) Manimekalai Moolamum Uraiyum, Saratha Publications, Rayapettai, Chennai, India.

Bakthavatsala Bharathi, (2005) Manidaviyal Kotpaadugal, Vallinam, y Block, Arasu Kudiyiruppu, Puthucheri, India.

Bakthavatsala Bharathi, (2008) Tamilar Maanidaviyal, Adaiyalam, Karuppur salai, Puthanatham, India.

Bakthvatsala Bharathi, Silambu Na. Selvarasu, R. Sambath (Editors), (2011) Panpattiyal Nokkil Pandai Tamilar Samaya Marabukal, Puthucheri Mozhiyiyal Panpattu Araichi Niruvanam, Puthucheri, India.

Balasubramanian, K.V., (2007) Purananooru Moolamum Uraiyum, New Century Book House, Ambathur, Chennai, India.

Dubuva, A.J.A., (2008) The Indian Peoples Customs Rituals Institutions, Alaigal Publication, Chennai, India.

Senthamarai, I., (2021) From an anthropological point of view, the ritual and faith shown by the Purananuru, International Research Journal of Tamil, 3(S-1), 150-157. https://doi.org/10.34256/irjt21s124

Shanthi, K., (2019) Life cycle rituals in Sangam Literature, International Research Journal of Tamil, 1(3), 24-30. https://doi.org/10.34256/irjt1934


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License